මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PE/2024/86** **2024.12.04**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவெம்பர் 14

## 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கமைய வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைத்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2024.11.14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்கள், வேட்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கமைய் வருமான, செலவின விபரத்திரட்டுக்களை வெவ்வேறாக தயாரித்து 2024.12.06 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு முன்னர் அந்த அந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், தேசியப் பட்டியலுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட வேட்பாளர்கள் தேர்தல்கள் செயலகத்திற்கும் ஒப்படைக்க வேண்டும். இக்காலப்பகுதிக்குள் வருமான, செலவின விபரத்திரட்டுக்களை கொண்டுவந்து ஒப்படைக்க முடியாவிடின் பதிவுத்தபால் மூலம் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் அல்லது தேர்தல்கள் செயலகத்தில் 2024.12.06 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்க முடியும்.

மேலும், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 8(அ) ஆம் பிரிவிற்கமைய, 2024.12.06 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தேர்தல் செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைக்காதிருப்பதன் ஊடாக சட்டவிரோதமான செயலொன்றைப் புரியும் தவறொன்றுக்கு ஆளாவதுடன், அது தொடர்பில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

**2024.12.03 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வேட்பாளர்கள் போட்டியிட்ட அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் தேர்தல்கள் செயலகத்திற்கும் வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைத்துள்ள கட்சி.'. சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளர்களின் விபரம் பின்வருமாறு:-**

| தொ. இல. | தேர்தல் மாவட்டம் | வேட்பாளர்கள் (அனைத்து அரசியல் கட்சிகளதும் குழுக்களதும்) | | கட்சிகள்.'.சுயேச்சைக் குழுக்கள் | | தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | போட்டியிட்ட வர்களின் மொத்த எண்ணிக்கை | வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைத்தவர்களின் எண்ணிக்கை | போட்டியிட்ட வர்களின் மொத்த எண்ணிக்கை | வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைத்தவர்களின் எண்ணிக்கை | பெயர் குறிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை | வருமான செலவின விபரத்திரட்டுக்களை ஒப்படைத்த வர்களின் எண்ணிக்கை |
| 01 | கொழும்பு | 966 | 219 | 46 | 07 | | |
| 02 | கம்பஹா | 902 | 171 | 41 | 04 | | |
| 03 | களுத்துறை | 392 | 146 | 28 | 07 | | |
| 04 | கண்டி | 510 | 162 | 34 | 07 | | |
| 05 | மாத்தளை | 184 | 70 | 23 | 07 | | |
| 06 | நுவரெலியா | 308 | 75 | 28 | - | | |
| 07 | காலி | 264 | 59 | 22 | 01 | | |
| 08 | மாத்தறை | 220 | 70 | 22 | 03 | | |
| 09 | அம்பாந்தோட்டை | 250 | 130 | 25 | 05 | | |
| 10 | யாழ்ப்பாணம் | 396 | 86 | 44 | 09 | | |
| 11 | வன்னி | 432 | 40 | 48 | 06 | 527 | 57 |
| 12 | மட்டக்களப்பு | 392 | 71 | 49 | 08 | | |
| 13 | திகாமடுல்ல | 640 | 101 | 64 | 05 | | |
| 14 | திருகோணமலை | 217 | 13 | 31 | 02 | | |
| 15 | குருணாகல் | 486 | 129 | 27 | 06 | | |
| 16 | புத்தளம் | 429 | 49 | 39 | 02 | | |
| 17 | அநுராதபுரம் | 312 | 54 | 26 | 02 | | |
| 18 | பொலன்னறுவை | 120 | 30 | 15 | 02 | | |
| 19 | பதுளை | 240 | 80 | 20 | 03 | | |
| 20 | மொணராகலை | 135 | 37 | 15 | 03 | | |
| 21 | இரத்தினபுரி | 350 | 110 | 25 | 02 | | |
| 22 | கேகாலை | 216 | 83 | 18 | 15 | | |
| | | **8361** | **1985** | **690** | **106** | **527** | **57** |

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர் - தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)